மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 44, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

44—

திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறுவை சிகிச்சை மருத்துவர் நியமனம் செய்தல்.

***33653*—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் மகப்பேறு அறுவைச் சிகிச்சை மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு (பெண்) மருத்துவர் நீண்ட நாட்களாக பணிபுரிந்து வருகிறார்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் நகராட்சி, வளர்ந்து வரும் ஒரு நகரமாகும். இதனைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டாக்டரை நியமனம் செய்ததற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 45, திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

45—

ஆர்.எஸ். மங்கலத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்துதல்

***33360*—திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—